# திருவண்ணாமலை நகரமன்றக் கூட்டம்

## சாதாரணக் கூட்ட அறிவிப்பு

**31.01.2019ம் தேதி வியாழன் கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறவுள்ள திருவண்ணாமலை நகரமன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள் –**

**முன்னிலை : திருமதி. எஸ். பாரிஜாதம், பி.பார்ம்., எம்.பி.ஏ., அவர்கள்**
**தனி அலுவலர் மற்றும் நகராட்சி ஆணையாளர், திருவண்ணாமலை நகராட்சி.**

## பொருட்கள்

**குறள் : –**
**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவன் அடிசேரா தார்.**

**6.** **நாட்குறிப்புகள்:**

(அ) நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜனவரி – 2019 மாதக்குறிப்பு
(ஆ) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி – 2019 மாதக்குறிப்பு
(இ) நகர்நல அலுவலர் அவர்களின் – ஜனவரி – 2019 மாதக் குறிப்பு

**அலுவலக குறிப்பு** : மன்றம் பதிவுசெய்யலாம்.

**தீர்மானம்**

**7.** திருவண்ணாமலை நகரம் வார்டு எண்.4, பிளாக் எண். 35 நகரளவு எண். 1871/1எ, 1871/1பி, 1887/2ஏ, 1887/2பி பரப்பு 2.82 ஏக்கர் பரப்பில் செங்கம் ரோடு பெரும்பாக்கம் சாலையில் குடியிருப்பு மனைப்பிரிவு அமைத்துக் கொள்ள நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் அவர்களின் கடிதம் ந.க.எண். 436/2018/வேம3 நாள் 03.01.2019ல் ம.வ/ந. ஊ.து.இ (வே.ம) எண்.8/2019 என்ற மனைப்பிரிவு தொழில்நுட்ப அனுமதி வரைபடம் மற்றும் நிபந்தனைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு: –**

1. மனைப்பிரிவு பதிவு செய்யலாம்
2. மனைப்பிரிவில் அமையப் பெற்றுள்ள சாலைகள், கால்வாய்கள், கல்வெர்ட் குடிநீர் பகிர்மான குழாய்கள், தெருவிளக்குகள் மற்றும் அதற்க்குண்டான விளக்கு வசதி போன்றவைகள் சம்மந்தப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்கள் திரு.TAS. சீனிவாசன் மற்றும் TAS முத்து அவர்களால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.
3. மேற்படி மனைப்பிரிவில் 60 குடியிருப்பு மனைகளும் 2 கடைகளும் அமைக்க இசைவு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான சர்வே உட்பிரிவு கட்டணம் ரூ.500/– 10ன் வீதம் ரூ. 31000/– 22.01.2019ல் நகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுள்ளது.
4. மேற்படி மனைப்பிரிவில் அமையும் தெருக்கள் மற்றும் பூங்கா இடங்கள் அனைத்தும் 3487/2018 நாள் 13.11.2018 மற்றும் 3905 /2018 நாள் 18.12.2018 ஆகிய தானப் பத்திரம் நகராட்சி ஆணையரின் பெயரில் தானமாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
5. மனைப்பிரிவு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சம்மந்தப்பட்ட மனைப்பிரிவு உரிமையாளர்களால் செய்து தரப்பட்டுள்ளது. மேலும் மின்கம்பம் அமைக்க ரூ.1,62,680/– நாள் 04.10.2018ம் மின் வாரியத்திலும் செலுத்தப்பட்டுள்ளது. தெருவிளக்கு அமைக்க நகராட்சியில் ரூ.33,000/– நாள் 08.10.2018யிலும் மனைப்பிரிவு அமைக்க ரூ. 30,000/– நாள் 08.10.2018ல் செலுத்தப்பட்டுள்ளது. பூங்காவிற்கு முள் கம்பி வேலி அமைக்கப்பட்டுள்ளது.
6. மேற்படி நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் வேலூர் கடிதத்தில் தெரிவித்துள்ள மனைப்பிரிவு நிபந்தனை 19 (இ) (2) ன்படி வட்டாட்சியரின் சான்று பெறப்பட்டுள்ளதாலும், நிர்வாக அதிகாரி மன நிறைவு அடைந்துள்ளதாலும் மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கலாம்.

**ந.க.எண். 3090/2018/எப்1**

**தீர்மானம்**

**8.** இந்நகராட்சியின் ஈசான்யம் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைய உள்ளதால் இவ்விடத்தில் திடக்கழிவு மேலாண்மையின் கீழ் குப்பைகளின் அளவுகள் சர்வே செய்யப்பட்டதை ஆய்வு செய்து அறிக்கை பெற வேண்டியுள்ளதால் இப்பணிகளை அண்ணா பல்கலைக்கழகம் சென்னை அவர்களின் மூலம் மேற்கொள்ள ரூ. 1,77,000/– ம் (ரூபாய் ஒரு லட்சத்து எழுபத்து ஏழாயிரம் )க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்
3. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்றுத் தொகை வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**9.** மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண். 212 / செ.ம.தொ.அ/2017 நாள் 20.09.2017ந் தேதிய கடிதத்தின்படி தீபத்திருவிழா – 2018 முன்னிட்டு நகராட்சியின் பணிகள் குறித்து தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கு ரூ. 23,100/– வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :–

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்

**தீர்மானம்**

**10.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 39 வார்டுகளிலும் உள்ள சொத்து வரிவிதிப்பு எண்களுக்கு 01.04.2018 முதல் பொது சீராய்வு செய்யப்பட்டது.

குடியிருப்பு பயன்பாட்டு வரிவிதிப்பு எண்களுக்கு 50%மும் குடியிருப்பு அல்லாத பயன்பாட்டு கட்டிடங்களின் வரிவிப்பு எண்களுக்கு 100%மும் வரி உயர்வு செய்யப்பட்டது.

2018–19 ம் ஆண்டையை சொத்துவரி சீராய்வு சிறப்பு அறிவிப்பு பொது மக்களுக்கு தெரிவிக்கும் வகையில் கொரியர் மூலம் அனுப்ப அருகிலுள்ள மூன்று கொரியர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டுள்ளது.

1. எஸ்.டி. கொரியர் அனுப்ப கூலி ஒரு வரிவிதிப்பு எண்ணிற்கு –– ரூ. 12/–
2. பிரஞ்ச் கொரியர் ஒரு வரிவிதிப்பு எண்ணிற்கு –– ரூ. 14/–
3. தி.பிரபஸ்னல் கொரியர் ஒரு வரிவிதிப்பு எண்ணிற்கு –– ரூ. 12/–

மேலும் அறிவிப்பு அனுப்ப கவல் வாங்கும் செலவும் சேர்த்து தோராயமாக செலவுத் தொகை ரூ. 4,00,000/– த்தை மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** – குறைவான விலைப்புள்ளி கொடுத்துள்ள எஸ்.ட்டி கொரியர் நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி வேலை உத்திரவு வழங்கியதையும் அதற்கான தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**11.** நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–5 அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்.22866/2018/பி3 நாள் 29.10.2018ல் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக 7வது மாநில உயர்மட்ட குழு ஆய்வுக்கூட்டத்தின்படி, தூய்மை பாரத இயக்கம் 2018–19ன் கீழ் மதிப்பீடு ரூ.360.00 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட நிர்வாக அனுமதியின்படி மதிப்பீடு தயாரித்து தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, 22.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.இலட்சத் தில்) | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | Revamping of Dump site through Bio mining to Recover the land at Esaniyam compost yard in Tiruvannamalai Municipality **(55479.75 $M^3$)** | 360.00 | M/s.EcoGarb, Egmore, Chennai – 08 | 0.00% குறைவு |
| | | | Task Constructions, Arcot, Vellore - 632 503 | 9.55% அதிகம் |

**அலுவலகக் குறிப்பு:**

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s.EcoGarb, Egmore, Chennai-08 என்ற நிறுவனத்தின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று Letter of Acceptance வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண். 1565/2018/இ1**

## தீர்மானம்

**12.** இந்நகராட்சியின் அண்ணா நகர் பழைய நீரூந்து நிலையத்தினை வர்ணம் பூசுதல் மற்றும் தண்டராம்பட்டு சாலையிலுள்ள நகராட்சி பள்ளியினை பழுது மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கு .01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராமமூர்த்தி<br>2, கல் நகர்,<br>திருவண்ணாமலை. | 0.90 | 0.32 % குறைவு |
| 2 | திரு.எம்.கமலக்கண்ணன்<br>26/38, அருணகிரிபுரம் 1வது தெரு<br>திருவண்ணாமலை. | | 1.82 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.ஆர்.ராமமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**13.** இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிலையம் கோவை –11 அவர்களின் கடிதம் ந.க.எண்.848/2018/அ2 நாள் 18.12.2018 ன்படி 2018–19 ஆம் ஆண்டுக்கான திருவண்ணாமலை நகராட்சியின் பங்குத் தொகையாக ரூ.1.50 லட்சம் வழங்கிட மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் தொகை வழங்கலாம்

ந.க.எண். 4281/2008/சி1

**தீர்மானம்**

**14.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் பல்வேறு விதமான திட்டங்கள் நடைபெற்று வருகிறது. உதாரணமாக பிளாஸ்டிக் தடை, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை, தனி நபர் கழிவறை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் போன்ற திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை பற்றி பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாக கருதி இந்நகரத்திலுள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் அனைத்து வார்டுகளிலும் தெருமுனை கலை நிகழ்ச்சிகள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கலைக் குழுக்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 520/2019/எச்1

**தீர்மானம்**

**15.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பல்வேறு விதமான திட்டங்கள் நடைபெற்று வருகிறது. உதாரணமாக பிளாஸ்டிக் தடை, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை, தனி நபர் கழிவறை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் போன்ற திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை பற்றி பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாக கருதி இந்நகரத்திலுள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் அனைத்து வார்டுகளிலும் தெரு முனையில் நாடகங்களை நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கலைக் குழுக்களிடமிருந்து விலைப்புள்ளிகள் கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 521/2019/எச்1

**தீர்மானம்**

**16.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு – சித்த மருத்துவமனை பணியாளர்கள் (1) எஸ்.ரூபகுமாரி (2) எஸ். கோகிலா அவர்கள் டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைக்காக நகராட்சி பள்ளிகள் மற்றும் தனியார் பள்ளி மாணவ மாணவிகளுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கியது சம்மந்தமாக ஆட்டோ கட்டணம், பெட்ரோல், ஜெராக்ஸ் மற்றும் பாத்திர வாடகை அவற்றிற்கு செலவினத் தொகையாக ரூ. 16,764/– க்கு (ரூபாய் பதினாறாயிரத்து எழுநூற்று அறுபத்து நான்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 4285/2019/எச்1

**தீர்மானம்**

**17.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பல்வேறு விதமான திட்டங்கள் நடைபெற்று வருகிறது. உதாரணமாக பிளாஸ்டிக் தடை, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை, தனி நபர் கழிவறை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் போன்ற திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை பற்றி பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாக கருதி இந்நகராட்சித்திலுள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் அனைத்து வார்டுகளிலும் தெருமுனை கலை நிகழ்ச்சிகள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கலைக் குழுக்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | கலைக்குழுக்களின் பெயர் | கலைக்குழுவினரால் கலை நிகழ்ச்சிகள் நடத்த நாள் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1 | சிவசக்தி கிராமிய கலைக்குழு நெ.5 அய்யா கவுண்டர் தெரு, வாழப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம் | ரூ. 10,000/– |
| 2. | ஜெயம் கலைக்குழு, நெ.110 மாடசாமி தெரு, வாழப்பாடி (வ) சேலம் மாவட்டம் | ரூ. 11,000/– |
| 3. | விஜி கலைக்குழு, நெ.39, மாடவீதி தெரு நெ.39, மாடவீதி தெரு, தஞ்சாவூர் மாவட்டம் | ரூ. 12,000/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த வரிசை எண்.1ல் உள்ள சிவசக்தி கிராமிய கலைக்குழு நெ.55 அய்யா கவுண்டர் தெரு, வாழைப்பாடி தாலுக்கா, சேலம் மாவட்டம் அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 520/2019/எச்1

**தீர்மானம்**

**18.** இந்நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பல்வேறு விதமான திட்டங்கள் நடைபெற்று வருகிறது. உதாரணமாக பிளாஸ்டிக் தடை, டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை, தனி நபர் கழிவறை கட்டுதல், திடக்கழிவு மேலாண்மை பணிகள் போன்ற திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதனை பற்றி பொது மக்களிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துவது அவசியமாக கருதி இந்நகராட்சித்திலுள்ள அனைத்து பள்ளிகள் மற்றும் அனைத்து வார்டுகளிலும் தெருமுனை கலை நிகழ்ச்சிகள் நடத்தி விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கு கலைக் குழுக்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வரிசை எண் | கலைக்குழுக்களின் பெயர் | கலைக்குழுவினரால் கலை நிகழ்ச்சிகள் நடத்த நாடகம் ஒன்றுக்கு ரூ. |
|---|---|---|
| 1 | திருமலை நாடக சபா, நெ.42, சங்கிலி கோயில் சந்து கள்ளத்தெரு, திருச்சி | ரூ. 2,000/– |
| 2. | சரஸ்வதி நாடக குழு நெ. 18 சிவா விஸ்ணு கோயில் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை | ரூ. 3000/– |
| 3. | காவியா நாடக குழு நெ.3 டவுன் ஸ்டேஷன் ரோடு, உறுமுதலைட்சுமி ஸ்கூல் அருகில் திருச்சி | ரூ. 3500/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த வரிசை எண்.1ல் உள்ள திருமலை நாடக சபா, நெ.42 சங்கிலி கோயில் சந்து, கள்ளத்தெரு, திருச்சி அவர்களின் விலைப்புள்ளியை ஏற்று அவர்களுக்கு பணி உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. பொது சுகாதார நலன் கருதியும், அவசர அவசியம் கருதியும் பணி மேற்கொண்டமைக்கும் அதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 521/2019/எச்1

**தீர்மானம்**

**19.** இந்நகராட்சியில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா – 2018 பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கும் மற்றும் பிற நகராட்சியிலிருந்து வரப்பெற்ற துப்புரவு பணியாளர்களுக்கும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுரையின்படி 350 எண்ணிக்கையில் பிளாஸ்டிக் பாய்கள், பொது சுகாதார அவசர அவசியம் கருதி மொத்த விற்பனை இடமான ஆவூரில் சென்று வாங்கவும், அதற்கான செலவினம் ரூ.40,250/–ஐ வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு –**

1. மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண். 6756/2018/எச்1

**தீர்மானம்**

**20.** இந்நகராட்சியில் ஈசான்யம் பகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க PPP Mode On DBFOT Basis ல் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்தல், திட்ட ஆவணங்கள் (Financial Viability) தயார் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 லட்சம் (இ,ரண்டு லட்சம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படு.றது.

**அலுவலகக் குறிப்பு –**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**21.** இந்நகராட்சியின் ஈசான்யம் பகுதியில் மத்திய பேருந்து நிலையம் அமைக்க PPP mode on DBFOT basisல் விரிவான திட்ட மதிப்பீடு தயார் செய்யும் பணிக்கு 30.01.2019 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | நிறுவனத்தின் பெயர் | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | Preparation of Bid document for Construction of Bus stand including Preparation of financial viability, Preparation of RFP as per PPP guidelines and TNIDB format, Preparation of concessionaire agreement as per PPP guidelines and TNIDB format, Making presentations to CMA and Secretary when ever required and Documents – Supply hard copies 5 Nos. and soft copies. | 2.00 | Sree Damodar Consultancy Services, Chennai – 49 | 2,00,000/– |
| | | | AMRUTH Infra Advisory Services, Chennai – 41 | 2,75,000/– |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட பணிக்கு விலைப்புள்ளி கொடுத்துள்ள Sree Damodar Consultancy Services, Chennai என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**கோப்பு எண்.179/2014/இ1**

**தீர்மானம்**

**22.** இந்நகராட்சியில் IUDM 2013–14 ன் கீழ் 5TPD Bio Methanation Plant அமைக்கப்பட்டு காய்கறி கழிவுகளில் இருந்து மின்சாரம் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் இதில் பொருத்தப்பட்ட Bio – GAS Balloon பழுதாகி உள்ளதால் புதியதாக பொறுத்துதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.1.00 லட்சம் (ஒரு லட்சம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**23.** இந்நகராட்சியில் IUDM – 2013 – 14ன் கீழ் Bio – Methanation Plant ல் பொருத்தப்பட்ட Bio GAS Ballon பழுதாகி உள்ளதை மாற்றி புதியதாக பொருத்துதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 24.01.2019ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள விலைப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | Blke sea power solutions<br>10/43 Arumbakkam,<br>Chennai - 106 | 1.00 | ரூ. 97,480 |
| 2 | SPOWER Solutions Private Limited<br>No. Madi Pakkam, Chennai–9 | | ரூ. 1,14,500 |

மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s Bule Sea Power Solutions Chennai நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்ற அனுமதி பெறலாம். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களில் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவும் வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**ந.க.எண். 427/2019/இ1**

**தீர்மானம்**

**24.** இந்நகராட்சி வார்டு எண்.1 பச்சையம்மன் கோயில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் நுண்ணிய உரக்களன் தொட்டிகளில் உரம் தயாரிக்க ஏதுவாக மேற்கூரை அமைத்தல் சுவர் அமைத்தல் தரை அமைத்தல் வர்ணப்பூச்சு வேலை செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 9.50 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**25.** இந்நகராட்சி வார்டு எண்.1 பச்சையம்மன் கோயில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் நுண்ணிய உரக்களன் தொட்டிகளில் உரம் தயாரிக்க ஏதுவாக மேற்கூரை அமைத்தல் சுவர் அமைத்தல் தரை அமைத்தல் வர்ணப்பூச்சு வேலை செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 09.10.2018ல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | வி.என். பிரகாஷ்<br>நெ. 26/38, கரிகாலன் தெரு,<br>திருவண்ணாமலை | 9.50 | 0.11 % குறைவு |
| 2 | எம். கமலக்கண்ணன்,<br>அருணைகிரிபுரம் 1வது தெரு,<br>திருவண்ணாமலை | | 1.15 % அதிகம் |

மேற்படி பெறப்பட்ட ஒப்பநத்ப்புள்ளிகிளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s.V.N. பிரகாஷ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை ஏற்க மன்ற அனுமதி பெறலாம். மேலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவும் வழங்கலாம்.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

ந.க.எண். 4853/2018/இ1

**தீர்மானம்**

**26.** இந்நகராட்சி வார்டு எண். 21 முதல் 39 வரை உள்ள பகுதியில் உள்ள பகிர்மான குழாய்களின் உடைப்பு கசிவுகள் ஏற்பட்டு குடிநீர் தேங்கி தொற்று நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் குடிநீர் பகிர்மான குழாயின் உடைப்பு மற்றும் கசிவுகளை போர்க்கால அடிப்படையில் உடனுக்குடன் சரி செய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.2.40 லட்சம் (இரண்டு லட்சத்து நாற்பதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**27.** மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை அவர்களின் ந.க.எண். ஈ2/23600/2018 நாள் 24.07.2018 ந் தேதிய கடிதத்தில் 15.08.2018ல் நடைபெறும் சுதந்திர தினவிழா – 2018க்கு நகராட்சியின் சார்பாக விழா நடைபெறும் மாவட்ட அட்சியர் அலுவலக வளாகத்தில் நடமாடும் கழிப்பிடம் அமைத்தல், சமன் செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ. 82,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

ந.க.எண். 3882/2018/இ1

**தீர்மானம்**

**28.** இந்நகராட்சி வார்டு எண். 33 கல்நகர் 2வது குறுக்கு தெரு சாலை பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதால் பொது மக்களுக்கும் போக்குவரத்திற்கும் இடையூறாக உள்ளதால் புதியதாக மழைநீர் வடிகால்வாய் உடன் கூடிய சிமெண்ட் சாலை அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.4.20 லட்சம் (நான்கு லட்சத்து இருபதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**29.** இந்நகராட்சி தகவல் தொழில் நுட்ப பிரிவில் உள்ள சர்வரில் பயன்படுத்தப்படும் 5KVA UPS பழுதாகி பயன்படுத்த முடியாத நிலை உள்ளதால் மின்தடை ஏற்படும் நிலையில் அலுவலக பணிகள், வரி வசூல் பணிகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே புதியதாக 180 AH TAL Tupeler Battery –8 எண்கள் மற்றும் 5.6 KVA UPS Luminator – 1 Nos வாங்கிப் பொறுத்த ஆகும் தோராய செலவினம் ரூ. 2,06,800/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

ந.க.எண். 1627/2018/இ1

**தீர்மானம்**

**30.** இந்நகராட்சி வார்டுஎ ண்.19 இராமலிங்கனால் தெரு 1 முதல் 13 வரையிலும், காந்திநகர் 6 முதல் 10 வரையிலும் உள்ள தெருக்களில் பாதாள சாக்கடை வீட்டு இணைப்பு வழங்கவும் மற்றும் குடிநீர் இணைப்பு வழங்கவும் சாலையில் தோண்டப்பட்ட பள்ளங்களால் போக்குவரத்திற்கும் பொது மக்களுக்கும் சிரமம் ஏற்படுவதால் பொது மக்களின் நலன் கருதி மேற்படி சாலைகள் சீரமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ.2.00 லட்சம் (இரண்டு லட்சம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**31.** இந்கராட்சி திருவூடல் தெரு முதல் பேகோபுரத் தெரு வரை உள்ள சாலைகளில் குடிநீர் கசிவுகள் சரி செய்ய தோண்டப்பட்ட பள்ளங்கள் சரி செய்த நிலையில் உறுதியற்ற நிலையில் உள்ளதால் தீபத்திருவிழாவின் போது தேர்கள் செல்ல ஏதுவாக காங்கீரிட் கம்பி கொண்டு RCC சிமெண்ட் Batch work அமைக்க ஆகும் தோராய செலவினம் ரூ. 3.40 லட்சம் (மூன்று லட்சத்து நாற்பதாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

ந.க.எண். 4851/2018/இ1

**தீர்மானம்**

**32.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் தினசரி கோப்புகள் தயார் செய்து அனுப்பவும் மேலும் தனி நபர் கழிப்பிடம் கட்டும் திட்டத்தின் கீழ் (IHHL) பயனாளிகளின் விண்ணப்பங்கள் தனித் தனியே கோப்புகளாக தயார் செய்து அனுப்ப தேவையான மூடுதாள்கள் 6000 எண்ணிக்கை திருவண்ணாமலை மாவட்ட எழுது பொருள் மற்றும் அச்சக சேவை தொழிற்கூட்டுறவு சங்கம் லிட் நிறுவனத்திடம் நேரடியாக வாங்கிக் கொள்ளவும் இதற்கு ஆகும் தோராய செலவினம் ரூ.46800/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**33.** இந்நகராட்சியின் தூய்மை பாரம் இயக்கத்தின் கீழ் (1) அண்ணாநகர் பூங்கா (2) தாமரைநகர் பூங்கா (3) பழைய அரசு பொது மருத்தவமனை (4) சகாய நகர் பூங்கா (5) சந்தோஷ் கார்டன் (6)செங்கம் ரோடு அவுசிங் போர்டு (7) பேருந்து நிலையம் ஆகிய இடங்களில் சேகரம் ஆகும் குப்பைகளை சேகரித்து Onsite Compost பணிகள் மேற்கொள்ள ஏதுவாக தோட்டிகள் கட்டுதல் மற்றும் இதர பணிகள் மேற்கொளள் ஆகும் தோராய செலவினம் ரூ.7.50 லட்சம் (ரூபாய் ஏழு லட்சத்து ஐம்பதாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

ந.க.எண். 4851/2018/இ1

**தீர்மானம்**

**34.** இந்நகராட்சி தண்டராம்பட்டு ரோடு நீரேற்று நிலையம் திட்டம் – IIன் உள்ள 75HP மின் மோட்டார் (No.01) பழுதடைந்தும் 350 mm வால்வு ராடு பழுதாகி உள்ளதாலும் குடிநீர் விநியோகப் பணிகள் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் 24 மணி நேரமும் இயங்கி வருவதால் பழுதுகள் ஏற்படுகிறது. எனவே குடிநீர் விநியோகம் பணிகளின் அவசர அவசியம் கருதி மேற்படி மின் மோட்டார் ரீ வைண்டிங் செய்து பழுது நீக்குதல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 லட்சம் (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்)க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. குடிநீர் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**35.** இந்நகராட்சி வார்டு எண். 27 தாமரைநகர் 25வது தெருவில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து பொது மகக்ளுக்கும் போக்குவரத்திற்கும் இடையூராக உள்ளதால் பொது மக்களின் நலன் கருதி புதியதாக கல்வெட் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.1.50 லட்சம் (ஒரு லட்சத்து ஐம்பதாயிரம்) க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதி வழங்கலாம்
2. வருவாய் நிதியின் கீழ் செலவிடலாம்.

**தீர்மானம்**

**36.** இந்நகராட்சி த.டராம்பட்டு ரோடு நீரேற்று நிலையம் திட்டம் – IIல் உள்ள 75HP மின் மோட்டார் (எண்.01) பழுது நீக்குதல், ரீவைண்டிங் செய்தல் மற்றும் 350mm வால்வு ராடு பழுது நீக்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ள 20.11.2018ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ ஏழுமலையான் ரீ வைண்டிங் இஞ்ஜிரிங் ஒர்க்கஸ், திருவண்ணாமலை உரிமை. வி.எம். ஏழுமலை | 1.50 | ரூ. 1,49,700 |
| 2 | குப்புசாமி ரீ வைண்டிங் ஒர்க்கஸ், 90/2 சூர்யா நகர், திருவண்ணாமலை | | ரூ. 1,50,050 |
| 3. | ஜெயபால் ரீ வைண்டிங் ஒர்க்கஸ் 59 ராஜராஜன் தெரு, திருவண்ணாமலை | | ரூ. 1,50,360 |

அலுவலகக்குறிப்பு –

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s ஸ்ரீ ஏழுமலையான் ரீ வைண்டிங் ஒர்க்கஸ் திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**37.** இந்நகராட்சி வார்டு எண்.19 இராமலிங்கனார் தெரு 1 முதல் 13 வரையிலும் காந்திநகர் 6வது தெரு முதல் 10வது தெரு வரையிலும் தோண்டப்பட்ட சாலைகள் பழுதடைந்து குண்டும் குழியுமாக உள்ளதை சீரமைக்கும் பணிகளுக்கு 23.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு பெறப்பட்டது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | என். தேவபிரபு 121, பைபாஸ் சாலை திருவண்ணாமலை | 2.00 | 0.11 % குறைவு |
| 2 | வி.என். பிரகாஷ், 12, கரிகாலன் தெரு, திருவண்ணாமலை. | | 0.68%அதிகம் |

**அலுவலகக்குறிப்பு –**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s என்.தேவபிரபு திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**38.** இந்நகராட்சி தகவல் தொழில்நுட்ப பிரிவில் உள்ள சர்வர் பயன்படுத்த ஏதுவாக 180AH Jal Tupeler Battery –8 எண்கள் மற்றும் 5.6 KVA UPS Lurninator –1 எண்ணிக்கை சப்ளை செய்ய 24.01.2019ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூபாயில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | Javahar Battery Sales & Service Centre<br>11/1 வானக்கார தெரு,<br>திருவண்ணாமலை. | 2,06,800 | 2,06,800 |
| 2 | மூர்த்தி பேட்டரி அவுஸ்<br>5/6 போளூர் ரோடு,<br>திருவண்ணாமலை | | 2,08,200 |
| 3 | சூர்யா பவர் லைன்<br>நெ.5, போளூர் ரோடு,<br>திருவண்ணாமலை. | | 2,09,800 |

**அலுவலகக்குறிப்பு –**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s ஜவஹர் பேட்டரி, திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**39.** மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திருவண்ணாமலை அவர்களின் உத்திரவின்படி பராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்டம் – 2018–19 ன்படி வார்டு எண்.16 தியாகி அண்ணாமலை நகர் குறுக்கு தெரு–2ல் சிமெண்ட் சாலை அமைக்கும் பணிகளுக்கு 06.07.2018ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மனற் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | TSR Builder's<br>15, அம்மணியம்மன் கோபுரத் தெர<br>திருவண்ணாமலை | 5.00 | 0.10% குறைவு |
| 2 | Arunachala Construction<br>51, ஆவராங்காட்டுத் தெரு,<br>திருவண்ணாமலை | | 0.69% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு –**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s TSR Builder's திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்

**40.** இந்நகராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2018–19 ன் கீழ் வார்டு எண். 16 ல் தியாகி அண்ணாமலை நகர் பகுதிக்கு தார்சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி அமைக்கும் பணிகளுக்கு 06.07.2018ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | TSR Builder's<br>15, அம்மணியம்மன் கோபுரத் தெர<br>திருவண்ணாமலை | 25.00 | 0.11% குறைவு |
| 2 | Arunachala Construction<br>51, ஆவராங்காட்டுத் தெரு,<br>திருவண்ணாமலை | | 0.75% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு –**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள M/s TSR Builder's திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

## தீர்மானம்

**41.** இந்நகராட்சி வார்டு எண். 21 முதல் 39 வரை உள்ள பகுதியில் உள்ள பகிர்மான குழாய்களின் உடைப்பு மற்றும் கசிவுகளை போர்க்கால அடிப்படையில் உடனுக்குடன் சரி செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 25.01.2019 ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | என். தேவபிரபு<br>121, பைபாஸ் ரோடு,<br>திருவண்ணாமலை | 2.40 | 0.12% குறைவு |
| 2 | எம். கமலக்கண்ணன்<br>நெ. 35/B அருணகிரிபுரம்<br>திருவண்ணாமலை | | 0.30% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு –**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள என். தேவபிரபு , திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**42.** இந்நகராட்சி தாமரை நகர் 6வது தெருவில் அமைந்துள்ள பூங்காவிற்கு Power Block அமைத்தல் டைல்ஸ் பதித்தல் M.S. Grill Door அமைத்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 30.01.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | எம். கமலக்கண்ணன்<br>நெ. 35/B அருணகிரிபுரம்<br>திருவண்ணாமலை | 11.25 | 0.15% குறைவு |
| 2 | எம். சத்தியராஜ்,<br>சிறுவள்ளுர்,<br>திருவண்ணாமலை தாலுக்கா | | 1.46% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு –**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள எம். கமலக்கண்ணன், திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**43.** இந்நகராட்சி வார்டு எண்.30 கம்மங்கொல்லைத் தெருவில் உள்ள சமுதாயக் கழிப்பிடம் பழுதாகி உள்ளதை பராமரிப்பு பணிகள் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 25.01.2019ல் பெறப்பட்ட ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | என். பிச்சாண்டி<br>நெ.291 / 247 தேனிமலை,<br>திருவண்ணாமலை | 3.20 | 0.04% குறைவு |
| 2 | எம். கமலக்கண்ணன்<br>நெ. 35/B அருணகிரிபுரம்<br>திருவண்ணாமலை | | 1.26% அதிகம் |

**அலுவலகக்குறிப்பு –**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள என். பிச்சாண்டி, திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**44.** இந்நகராட்சி பொறியியல் பிரிவில் கணினிகளின் இயக்கம் தடைபடாமல் இயக்க ஏதுவாக UPS பொருத்த பேட்டர், இன்வாட்டர் சப்ளை செய்தல் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள 20.12.2018ல் பெறப்பட்ட விலைப்புள்ளிகள் முடிவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | Shivam Service Centre<br>32K CNJ Complex<br>By Pass Road, Tiruvannamalai | 45,000 | ரூ.37,000 |
| 2 | Jothi Electrical and Engineering works<br>47/4 கோபால் தெரு,<br>திருவண்ணாமலை. | | ரூ. 39,000 |

**அலுவலகக்குறிப்பு –**

1. மேற்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1ல் கொடுத்துள்ள Shivam Service Centre திருவண்ணாமலை என்பவரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதை அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**தீர்மானம்**

**45.** இந்நகராட்சியின் கார்த்திகை தீபத்திருவிழா–2018ஐ முன்னிட்டு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய ஏதுவாக, மாடவீதியில் கற்பக விநாயகர் கோவில் தெரு முதல் பேகோபுரத் தெரு வரை உள்ள நகராட்சிக்கு சொந்தமான பகுதியில் பழுதடைந்த சாலை பராமரிக்கும் (RCC Patch work) பணிக்கு, 12.11.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் | கொடுத்துள்ள விலைப்புள்ளி (Each $m^3$ or Kg) |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் கார்த்திகை தீபத்திருவிழா–2018ஐ முன்னிட்டு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய ஏதுவாக, மாடவீதியில் கற்பக விநாயகர் கோவில் தெரு முதல் பேகோபுரத் தெரு வரை உள்ள நகராட்சிக்கு சொந்தமான பகுதியில் பழுதடைந்த சாலை பராமரித்தல் (RCC Batch work) | திரு.வி.எம்.ஏழுமலை | Earth work - **Rs.64/- ($m^3$)**<br>Wet Mix Mecadam (WMM) - **Rs.1593/- ($m^3$)**<br>PCC 1:4:8 mix 40mm - **Rs.3332/- ($m^3$)**<br>RCC 1:1:2 using 20mm - **Rs.8150/- ($m^3$)**<br>Supply fabrication Steel - **Rs.61.50/- (Kg)**<br>Labour charges for BT cutting - **Rs.400/- ($m^3$)** |
| | | திரு.வி.என்.பிரகாஷ் | Earth work - **Rs.64/- ($m^3$)**<br>Wet Mix Mecadam (WMM) - **Rs.1604/- ($m^3$)**<br>PCC 1:4:8 mix 40mm - **Rs.3356/- ($m^3$)**<br>RCC 1:1:2 using 20mm - **Rs.8207/- ($m^3$)**<br>Supply fabrication Steel - **Rs.62/- (Kg)**<br>Labour charges for BT cutting - **Rs.450/- ($m^3$)** |
| | | திரு.கே.ராமமூர்த்தி | Earth work - **Rs.64/- ($m^3$)**<br>Wet Mix Mecadam (WMM) - **Rs.1604/- ($m^3$)**<br>PCC 1:4:8 mix 40mm - **Rs.3356/- ($m^3$)**<br>RCC 1:1:2 using 20mm - **Rs.8207/- ($m^3$)**<br>Supply fabrication Steel - **Rs.62/- (Kg)**<br>Labour charges for BT cutting - **Rs.450/- ($m^3$)** |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட பணியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.வி.எம்.ஏழுமலை, திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

## தீர்மானம்

**46.** திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 72வது சுதந்திர தினவிழாவிற்கு வருகை தரும் பொது மக்களுக்கு நடமாடும் கழிப்பிடம் அமைத்தல், சமன் செய்தல் மற்றும் கழிப்பிடம் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 06.08.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டது. பெறப்பட்ட விலைப்புள்ளிகளை மன்ற அங்கீகாரத்துக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சம்) | கொடுத்துள்ள விலைப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | திரு.பி.பூங்காவனம், சேந்துகிணறு தெரு, தேனிமலை, திருவண்ணாமலை. | 0.82 | 0.11 % குறைவு |
| 2 | திரு.ஆர்.மாரிமுத்து கல்லரைப்பாடி கிராமம் செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். | | 1.34 % அதிகம் |
| 3 | அஸ்வினி கன்ஸ்ட்ரக்ஷன் 36, பேகோபுரத் தெரு திருவண்ணாமலை. | | 2.53 % அதிகம் |

## அலுவலகக்குறிப்பு

1. குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.பி.பூங்காவனம், திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

## தீர்மானம்

**47.** இந்நகராட்சியின் சோமவாரக்குளம் நீரேற்று நிலையத்தில் நுண்ணிய உரக்களன் அமைக்கும் பணிக்கு 25.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | அஸ்வினி பில்டர்ஸ் 11/C, புதுவாணியங்குளத் தெரு திருவண்ணாமலை. | 4.50 | 0.08 % குறைவு |
| 2 | திரு.என்.பிச்சாண்டி 291/247, தேனிமலை, திருவண்ணாமலை. | | 1.56 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள அஸ்வினி பில்டர்ஸ், திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்

**தீர்மானம்**

**48.** இந்நகராட்சியின் வார்டு எண்.33 கல்நகர் 2வது குறுக்கு தெருவில் சிமெண்ட் சாலை மற்றும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு 30.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.ராமமூர்த்தி<br>2, கல் நகர்,<br>திருவண்ணாமலை. | 4.20 | 0.24 % குறைவு |
| 2 | திரு.எம்.கமலக்கண்ணன்<br>26/38, அருணகிரிபுரம் 1வது தெரு<br>திருவண்ணாமலை. | | 0.57 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு.ஆர்.ராமமூர்த்தி அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**49.** இந்நகராட்சியின் முக்கிய இடங்களில் சேகாரமாகும் குப்பையினை ஆங்காங்கே உரமாக்க ஏதுவாக, நுண் உர தொட்டி கட்டும் பணிக்கு 05.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | திரு.என்.பிச்சாண்டி<br>தேனிமலை<br>திருவண்ணாமலை. | 7.50 | 0.09 % குறைவு |
| 2 | திரு.எ.சத்தியராஜ்<br>சிறுவள்ளுவர் கிராமம்<br>திருவண்ணாமலை | | 1.30 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள திரு. திரு.என்.பிச்சாண்டி , திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**50.** இந்நகராட்சியின் நகராட்சியின் வார்டு எண்.27 தாமரை நகர் 25வது தெருவில் சிறுபாலம் அமைக்கும் பணிக்கு 25.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) | கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|
| 1 | அஸ்வினி பில்டர்ஸ்,<br>11/சி, புதுவாணியங்குளத் தெரு,<br>திருவண்ணாமலை. | 1.50 | 0.10 % குறைவு |
| 2 | திரு.என்.பிச்சாண்டி<br>தேனிமலை<br>திருவண்ணாமலை. | | 1.49 % அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

1. குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்டுள்ள அஸ்வினி பில்டர்ஸ், திருவண்ணாமலை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**51.** இந்நகராட்சியின் கார்த்திகை தீபத்திருவிழா–2018ஐ முன்னிட்டு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய ஏதுவாக, நகரின் முக்கிய சாலைகளில் உள்ள குண்டும் குழிகளை சரி செய்யும் பணிக்கு, 06.11.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்டுள்ள விலைப்புள்ளியினை மன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண். | பணியின் பெயர் | நிறுவனத்தின் பெயர் | கொடுத்துள்ள விலைப்புள்ளி (Each $m^3$ or $m^2$) |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் கார்த்திகை தீபத்திருவிழா–2018ஐ முன்னிட்டு வரும் பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் செய்ய ஏதுவாக, நகரின் முக்கிய சாலைகளில் உள்ள குண்டும் குழிகளை சரி செய்தல். (Patch work) | திரு.கே.சிவாஜி,<br>திருவண்ணாமலை | WMM – **Rs.1592/- ($m^3$)**<br>Prime coat rate of 0.70kg - **Rs.55.50/- ($m^2$)**<br>Tack Coat of 2.5 kgs/10 sqm - **Rs.10.00/- ($m^2$)**<br>Tack Coat (RS-1) – 0.20 kg - **Rs.14.80/- ($m^2$)**<br>50mm thick DBM - **Rs.6860/- ($m^3$)** |
| | | திரு.வி.என்.பிரகாஷ்<br>திருவண்ணாமலை | WMM – **Rs.1595/- ($m^3$)**<br>Prime coat rate of 0.70kg - **Rs.56/- ($m^2$)**<br>Tack Coat of 2.5 kgs/10 sqm - **Rs.12/- ($m^2$)**<br>Tack Coat (RS-1) – 0.20 kg - **Rs.17/- ($m^2$)**<br>50mm thick DBM - **Rs.6870/- ($m^3$)** |
| | | திரு.ஆர்.மாரிமுத்து<br>திருவண்ணாமலை | WMM – **Rs.1600/- ($m^3$)**<br>Prime coat rate of 0.70kg - **Rs.60/- ($m^2$)**<br>Tack Coat of 2.5 kgs/10 sqm - **Rs.15/- ($m^2$)**<br>Tack Coat (RS-1) – 0.20 kg - **Rs.19/- ($m^2$)**<br>50mm thick DBM - **Rs.6880/- ($m^3$)** |

**அலுவலகக்குறிப்பு**

1. மேற்கண்ட பணியில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு.கே.சிவாஜி, திருவண்ணாமலை அவர்களின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மானம்**

**52. பொருள் : – 1 –** சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) 37வது பிரிவின்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015–ன்கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் கீழ் திருவண்ணாமலை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 கீழ்க்கண்டவாறு ஏற்படுத்தப்படுகின்றது.

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், 1920 அத்தியாம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும், அவற்றிற்கு ஏற்படுத்தப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டும், மற்றும் சாலையோர விற்பனையினை ஒழுங்குப்படுத்தவும், திருவண்ணாமலை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 ஏற்படுத்தப்படுகின்றது.

## அத்தியாயம்–1

## முதனிலை

1. **குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.–** இந்த துணை விதிகள் திருவண்ணாமலை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள், 2018 என்றழைக்கப்படும்.

(2) இந்த துணை விதிகளானது வெளியிடப்படும் நாள் முதல் அமுலுக்கு வரும்

2. **பொருள் வரையறைகள்.–** இந்த துணை விதிகளில், உபயோகப்படும் வார்த்தைகளுக்கான பொருள் வரையறை,

**(i)** "சட்டம்" என்பது சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) சட்டம், 2014 (மத்திய சட்டம் எண்.7/2014) என்று பொருள்படும்;

**(ii)** "விற்பனை திட்டம்" என்பது சட்டத்தின் 21ஆம் பிரிவின் கீழ் தயாரிக்கப்பட்ட விற்பனை திட்ட வரைப்படம் என்று பொருள்படும்;

**(iii)** "விதிகள்" என்பது தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) விதிகள், 2015 என்று பொருள்படும்;

**(iV)** "திட்டம்" என்பது சட்டத்தின் 38வது பிரிவின் கீழ் கட்டமைக்கப்பட்ட தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு, விற்பனை ஒழுங்குமுறை மற்றும் உரிமம் வழங்குதல்) திட்டம், 2015 என்று பொருள்படும்;

**(V)** "நகர விற்பனைக் குழு" என்பது விதிகளின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நகர விற்பனைக் குழு என்று பொருள்படும்;

சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் வரையறுக்கப்பட்ட வார்த்தைகளும், வெளிபாடுகளும் இந்த துணை விதிகளில் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே சட்டம், விதிகள் அல்லது திட்டம் ஆகியவற்றில் கொண்டுள்ள அதே பொருள்படும்.

## அத்தியாயம்–2

## விற்பனை மண்டலத்தில் விற்பனை செய்யும் விதம் மற்றும் ஒழுங்கு முறைகள்

**3.(1)** பாத சாரிகளின் நடமாட்டம் (Foot fall) மற்றும் சாலையின் அகலம், வாகனம், மற்றும் பாதசாரிகளுக்கான சீரான இயக்கம் ஆகியவற்றின் தன்மையை கருத்தில் கொண்டு விற்பனை மண்டலங்களை நகர விற்பனைக் குழு முடிவு செய்யும்.

(2) ஒரு இடத்தின் கொள்திறனுக்கேற்ப சாலையோர வியாபாரிகளின் எண்ணிக்கை வரையறுக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் நகர விற்பனைக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டவாறு நடமாடும் விற்பனையாளர்களின் எண்ணிக்கை வரம்பை மீறாமல் இருப்பது குறித்து திருவண்ணாமலை நகராட்சியால் அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் சரிப்பார்க்கப்பட வேண்டும்.

(3) சாலையின் அகலத்தைக் கொண்டும், சாலை விவரிப்பு குறித்தான கீழ்காணும் விவரங்களைக் கொண்டும் இத்திட்டத்தில் கட்டுபடுத்தப்பட்ட விற்பனை மண்டலங்களை விவரிக்கப்பட வேண்டும்.

(i) இரு வழி போக்குவரத்து கொண்ட 6 மீட்டர் அகலம் கொண்ட சிறிய சாலைகளில், நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகளில் எந்தவித நேரத்திலும் வாகனங்கள் அனுமதிக்கப்படாத சாலையாக அறிவிக்கப்பட்டால், அச்சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(ii) 3 மீட்டர் முதல் 5 மீட்டர் வரை அகலமான சிறிய சாலைகளில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது. இருப்பினும், அத்தகைய சாலைகள் ஒரு வழி வாகன சாலை என அறிவிக்கப்பட்டிருந்தால், சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iii) 5 மீட்டர் முதல் 6 மீட்டர் வரை அகலமான சாலைகளில், சாலையின் ஒரு புறத்தில் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(iV) 10 மீட்டர் மற்றும் அதற்கு மேல் அகலமான பெரிய சாலைகளில், சாலையின் இரு புறமும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்படலாம்.

(V) ஒரு சாலையில் விற்பனைஅனுமதிக்கப்பட்ட இடத்தில் அதன் கொள்திறனுக்கேற்ப சாலையோர விற்பனையாளர்களின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

(Vi) சீரான போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் குறித்து காவல்துறையின் அனுமதி பெறப்பட்ட பின்னர் தான் நிலையான சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும். தேவைப்பட்டால், அந்த இடத்தில் வாகன நிறுத்தம் தடை செய்யப்பட வேண்டும்.

(Vii) வாகன போக்குவரத்து மற்றும் பாதசாரிகளின் நடமாட்டம் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு தான், சாலைகளில் நடமாடும் சாலையோர விற்பனை அனுமதிக்கப்பட வேண்டும்.

(Viii) சாலை வடிவமைப்பு குறித்தான அறிவுரைகள், இந்த துணை விதிகளுடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(4) சாலையோர விற்பனை தடைச் செய்யப்பட்ட மண்டலங்களிள்,

(i) அரசு கட்டிடங்கள், உயர்நீதி மன்றம், பிற நீதிமன்றங்கள், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், மாவட்ட ஊராட்சி / மாநகராட்சி / நகராட்சி அலுவலகங்கள், தீயணைப்பு நிலையங்கள் ஆகியவற்றின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 5 மீட்டர் நீளத்திற்கும்,

(ii) இரயில் நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 30 மீட்டர் நீளத்திற்கு,

(iii) நகர எல்லைக்குட்பட்ட இரயில் கடவுப்பாதையின் இரு பக்கங்களிலும் 30 மீட்டர் நீளத்திற்கும்,

(iV) பேருந்து நிலையங்களின் நுழைவு வாயில் மற்றும் வெளியேறும் வாயிலிருந்து 10 மீட்டர் நீளத்திற்கு,

(V) பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருளியல் தளங்கள் மற்றும் அகழ்வுகள் சட்டம், 2010ன்கீழ் அறிவிக்கப்பட்ட இடங்களில் பாதுகாப்பு கருதி சாலையோர விற்பனை அனுமதிக்கப்படமாட்டாது.

(Vi) மரபுரிமை சொத்து காப்பு விதிகளில் தடை செய்யப்பட்ட பகுதிகள்

(Vii) இரண்டு அல்லது அதிகமான சாலைகள் குறிப்பிட்ட இடங்களில் அனைத்து பக்கங்களில் 15 மீட்டர் நீளத்திற்கு

(Viii) ‘எந்த ஒரு கல்வி நிறுவனத்தின் நுழைவு வாயில் மற்றும் வெளியேரும்
வாயிலிருந்து 15 மீட்டர் நீளத்திற்கு.

(ix) பாதுகாப்பு கோணத்தில் தடை செய்யப்பட்ட எந்த பகுதியிலும்

(x) நகர விற்பனைக் குழுவின் ஒப்புதல் பெற்று நகரின் எந்த ஒரு பகுதியிலும் சாலையோர விற்பனை தடை செய்வது குறித்து உள்ளாட்சி அமைப்பு முடிவு செய்து, அத்தகைய இடங்களில் சாலையோர விற்பனை தடை செய்யப்பட வேண்டும்.

**குறிப்பு–** கணக்கெடுப்பின்போது அறியப்பட்ட எந்தஒரு அங்காடியையோ அல்லது இயற்கையாக அமைய பெற்ற அங்காடியையோ, விற்பனை தடை செய்யப்பட்ட பகுதியில் இணைக்கக்கூடாது.

**4. சாலையோர விற்பனையாளர்களுக்கான கட்டுப்பாடு.–** எந்த ஒரு விற்பனை மண்டலத்திலும், விற்பனை செய்ய சான்று பெற்ற சாலையோர விற்பனையாளர்கள்;

(i) வாகன போக்குவரத்து, மிதி வண்டி மற்றும் பாதசாரி நடமாற்றத்திற்கு தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(ii) கதவு, நுழைவு வாயில், தீயணைப்பு கதவுகள் அல்லது அவசரகால வெளியேறும் பாதை ஆகியவற்றிற்கு முட்டுகொடுத்து தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iii) குடிநீர் வழங்கல், கழிவுநீர், தொலைபேசி, மின்சாரம் அல்லது இதே மாதிரியான அமைப்புகள் போன்ற எந்தவொரு பயன்பாட்டிற்கும் தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(iV) சாலையில் அல்லது அதன் பக்கத்தில் உள்ள எந்த கட்டமைப்புகளுக்கோ, வழிகாட்டு பலகைகள், அறிவிப்பு பலகைகள் , நகர வேலைகள் அல்லது நடவடிக்கைகளுக்கோ தடங்கல் அல்லது இடையூறு செய்யக்கூடாது,

(V) ஆட்சேபனைக்குரிய சேவைகளையோ அல்லது பொருட்களையோ விற்பனை செய்வதோ கூடாது,

(Vi) நகர விற்பனைக் குழுவால் ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தை காட்டிலும் அதிகமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்யக் கூடாது,

(Vii) நகர விற்பனைக் குழுவால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு பின் சேவைகளையோ அல்லது பொருட்களை வணிகம் செய்வதோ கூடாது,

